2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல்*

[பேரவைத் தலைவர்] [2021 செப்டம்பர் 13

(முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2021), மாண்புமிகு வேளாண்மை– உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்', ஆம். வேளாண்மையைச் செய்து, வாழ்கின்றதில் கிடைக்கின்ற சிறப்பு வேறு எந்தத் தொழிலிலும் இல்லையென்ற ஔவை பிராட்டியாரின் கூற்றினை முழுமைப் பெறச் செய்ய வேண்டுமானால், பல்வேறு தடைகளைக் கடந்துதான் விவசாயிகள் அந்தச் சிறப்பைப் பெற முடியும் என்பதை நம்மில் யாரும் மறுக்க முடியாது. அவ்வாறு உள்ள தடைகளில் விளைபொருள் விற்பனை என்பது ஒரு முக்கிய காரணியாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 'நமக்கு இன்னலும், இடையூறும் இருக்கத்தான் செய்யும். ஆனால், நமது உழைப்பு ஒருநாளும் வீண்போகாது' என்றார். அண்ணா அவர்களின் எண்ணக் குவியல்களை உண்மையாக்கும் விதமாக விளைபொருட்களின் விலை ஏற்ற இறக்கங்களினால் விவசாயிகள் பாதிப்படையாமல் இருக்க சரியான விலை விவரம், சந்தை நிலவரம் ஆகியவற்றை விவசாயிகள் அறியவும், சேமிப்பைப் பயன்படுத்தி, இன்னல்களைக் கடந்து, இனிய வாழ்வை விவசாயிகள் பெறவேண்டும் என்ற உன்னத உந்துதலின் வெளிப்பாடுதான் வேளாண் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் துறை உருவாக்கப்பட்டதன்

@ 8-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி]

அடிப்படையாகும். வேளாண்மை விற்பனைத் துறை சட்டம், 1987, பிரிவு 10, துணைப் பிரிவு 2-ன்கீழ் உருவானதுதான் வேளாண்மை விற்பனைக் குழு. இந்தக் குழு, விவசாயிகளின் இன்னல்களை முற்றிலும் அறிந்தவர்களைக்கொண்டு செயல்படுவதினால்தான் விவசாயிகளுக்கு உண்மையான பலன்கள் சென்றடையும் என்பதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. 16 உறுப்பினர்களாக குறு, சிறு விவசாயிகள், அந்தந்தப் பகுதிகளில் அறிவிக்கை செய்யப்பட்ட விவசாய விளைபொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்தியாளர்கள், அரசு அலுவலர்கள் என்று, இந்தக் குழு அனைவரையும் உள்ளடக்கியதாகச் செயல்படும், ஒரு குழுவாக உருவாக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

பிற்பகல் 1-50

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: அதனடிப்படையில்தான், 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்விதமாக, இந்தக் குழு, ஜனநாயக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு, செயல்பட்டு வந்தது. மேலும், இவ்வாறு அமைக்கப்பட்ட இக்குழு, சிறப்பாகத் தொடங்கி செயல்பட்டுவந்த காலத்தில், ஜனநாயக மரபை மீறி, இந்தக் குழுவானது, நடப்பு ஆண்டான 2021 ஆம் ஆண்டில், ஜூலை மாதம் 23 ஆம் நாளன்று கலைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலானது, ஜனநாயக நடைமுறையை மீறி செயல்படும் செயல் மட்டுமின்றி, விவசாயிகளின் நலனைப் பாதிக்கக்கூடிய ஒரு முடிவாகும். எனவே, விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க வேண்டிய கடமை கொண்ட அரசு, ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு, ஜனநாயக முறைப்படி உருவாக்கப்பட்ட இந்த வேளாண்மைக் குழுவினைக் கலைத்துவிட்டு, அதற்கான சட்டமுன்வடிவினை இந்த அவையில் நிறைவேற்ற முயல்வது, ஜனநாயகத்திற்கு எதிரானதாகும் என்பதால், இந்தச் சட்டமுன்வடிவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்பதோடு, இதனை மீண்டும் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, அரசைக் கேட்டுக்கொண்டு, 'உயிர்களுக்கு உணவளிப்பது, உழவர்களின் கையில், உழவர்களை வாழவைப்பது, ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கையில்' என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரையை முடித்துவிட்டார்கள். நீங்கள் உரையாற்றலாம்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு இதே குழு அப்போதும் இருந்தது. அது, எங்களுடைய அரசால் நியமிக்கப்பட்டதென்று அப்போதே அதன் காலம் முடிவதற்கு முன்பாகவே, இதே எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், 2011 ஆம் ஆண்டில், அக்குழுவைக் கலைத்தார்கள். கலைத்தவர்கள் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 9 ஆண்டுக்காலமாக குழு நியமிக்கப்படாமல், கடைசியில் போகிறபோக்கில், 30–12–2020–லிருந்து, 26–2–2021 வரை, 24 குழு உறுப்பினர்களை நியமித்தார்கள். ஒரே காலகட்டமாக போடாமல், படிப்படியாக நியமித்தார்கள். 24 பேர்தான் பொறுப்பு. அதிலும் இரண்டு குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை. இதுவரை நியமிக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், இந்த ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, அவர்களுடைய நடவடிக்கைகள் சரியாக இல்லாத காரணத்தினால், திரும்பப் பெறும்வகையில், இந்தக் குழுவைக் கலைத்துவிட்டு, தனி அலுவலர் பதவி வேண்டுமென்று கோரிக்கையை அவையின்முன்பு வைக்கின்றோம். அதே ஆட்சியில்தான் கிட்டத்தட்ட 9 வருடங்கள் தனி அலுவலர் ஆட்சி புரிந்தார்கள். கடந்த 10 ஆண்டுக்காலமாக, இந்தக் குழுவையே அமைக்காமல், தனி அலுவலரை வைத்துக்கொண்டே 6 மாதங்கள், 6 மாதங்களாக வைத்துக்கொண்டு, அந்த நிருவாகத்தை நடத்தினார்கள். ஆட்சி முடிவதற்கு முன்புதான் குழுவை நியமித்திருக்கின்றார்கள். எனவேதான், நாங்கள் இந்தக் குழுவைக் கலைத்துவிட்டு, புதிய குழுவை நியமிக்க இருக்கின்றோம். அதற்கு வசதியாக தனி அலுவலரின் பதவிக் காலத்தை, 30–11–2020 முதல் 29–11–2021 வரை ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிப்பது அவசியமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1–55

(எ) தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2021), மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 8-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS